FTM

**9 ஆம் வகுப்பு**

# காலாண்டுத் தேர்வு - 2023

## தமிழ்

காலம் : 2.30 மணி                                                  மதிப்பெண்கள் : 100

பகுதி - 1

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. ஆ) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** 15 X 1 = 15

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் .........
   அ) வீரமா முனிவர் ஆ) மாக்ஸ் முல்லர் இ) கால்டுவெல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்
2. உலக தாய்மொழி நாள்...... அ) ஜனவரி 5 ஆ) பிப்ரவரி 20 இ) பிப்ரவரி 21 ஈ) பிப்ரவரி 18
3. உண்ணப்படும் தமிழ்த்தேனே - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக?
4. தமிழ்விடு தூது எவ்வகை இலக்கியத்தைச் சார்ந்தது?
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) தனிப்பாடல் ஈ) சிற்றிலக்கியம்
5. உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை எது? அ) அகழி ஆ) கேணி இ) கண்மாய் ஈ) குண்டம்
6. பகுபத உறுப்புகள் ...... வகைப்படும். அ) மூன்று ஆ) ஆறு இ) ஐந்து ஈ) நான்கு
7. <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
8. ***பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக.***
   காலந்தோறும் தன்னைப் ***(புதுப்பித்து)*** .... மொழி தமிழ்.
9. ***மரபு இணைச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.*** மேடும் பள்ளமும்.
10. ***பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக.*** அ) கர்நாடம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா
11. ஐம்பெருங்குழு, எண்பேராயம் எவ்வகைச் சொற்கள்?
    அ) திசைச் சொற்கள் ஆ) வடச் சொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

***பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.***

பழையவை எல்லாம் பழமை அல்ல
பண்பும் அன்பும் பழையவை தாம்
இளையவர் கூட்டம் ஏந்தி நடக்க
இனமும் மொழியும் புதியவை தாம்

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் ...... .
13. இப்பாடலின் ஆசிரியர் ...... .
14. பண்பும், அன்பும் : இலக்கணக் குறிப்பு தருக.
15. இப்பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

பகுதி - II (மதிப்பெண் 18)

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. வினா எண் 21 கட்டாயமாக விடையளிக்கவும்.** 4 X 2 = 8

16. ***விடைக்கேற்ற வினா அமைக்க.***
    அ) சிந்துவெளி நாகரீக வரலாற்றிலும் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது.
    ஆ) ஆதிச்ச நல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முது மக்கள்தாழி கண்டுபிடிக்கப்பட்டன.
17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
18. கூவல் என்று அழைக்கப்படுவது எது?
19. பட்டி மண்டபம், பட்டி மன்றம் இரண்டும் ஒன்றா, விளக்கம் தருக.
20. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினை கூறுக.
21. "விடல்" என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5 X 2= 10

22. இசையின்றி அமையாது பாடல் (உடன் பாட்டுத் தொடராக மாற்றுக)
23. விரித்த - பகுபதஉறுப்பிலக்கணம் தருக.
24. ***சொல்லுக்குள் சொல் தேடுக.*** அ) ஆற்றங்கரையோரம் ஆ) கடையெழு வள்ளல்கள்
25. ***கலைச் சொல் தருக.*** அ) Electronic devias ஆ) Cultural symbol
26. ***தொடர் தரும் பொருளைக் கூறுக.*** கைம்மாறு, கைமாறு.
27. ***அகராதி காண்க.*** கந்தி, நெடில்
28. ***பழமொழியை பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.***

1. நெல்லுக்கு பாய்கின்ற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.

பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 2 X 3 = 6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன?
30. சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
31. **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியவற்றின் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் உதவும் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்.

1. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்கள் யாவை?
2. முல்லை பெரியாறு அணையைக் கட்டியவர் யார்?
3. முல்லை பெரியாறு ...... ...... உதவுகிறது.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2 X 3 = 6

32. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுபித்துக் கொள்கிறது?
33. ஓ என் சம காலத் தோழர்களே கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
34. காடெல்லாம் .... எனத் தொடங்கும் பெரிய புராணப்பாடலை அடிபிறழாமல் எழுதுக. *(அல்லது)*
ஒன்றிறி வதுவே உற்றறிவதுவே எனத் தொடங்கும் உயிர் வகைப் பாடலை எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 2 X 3 = 6

35. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
36. துணை வினைகளின் பண்புகள் யாவை?
37. எந்தெந்த இடங்களில் வல்லினம் மிகாது? எவையேனும் மூன்று எடுத்துக்காட்டு தருக.

பகுதி - IV பிரிவு - 1


**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 X 5 = 25

38. அறிவையும், உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்? *(அல்லது)*
*நயம் பாராட்டுக.*

கல்லும் மலையும் திறித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

39. பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.
*(அல்லது)* உங்களின் நண்பன் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்து கருத்துக்களை கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு
கவினுறக் கருத்தளிக்க.



41. அறிஞர்களின் பொன் மொழிகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக.
1. Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval
2. Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek.
3. An early morning walk is a blessing for the whole day - Henry David Thorean.
4. Just living is not enough.One must have sunshine freedom, and little flower.- Hans Christian
5. The biggest problem is the lack of love and charity - Mother Teresa.

42. பள்ளியிலும் வீட்டிலும் நீ எவ்வாறு நடந்து கொள்வாய் என்பதை ஒப்பிட்டு எழுதுக.

பகுதி - V (மதிப்பெண் 24)

**விரிவான விடையளிக்க.**

43. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.
*(அல்லது)* ஆ) ஏறு தழுவுதல் தமிழரின் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கு காரணங்களை விவரி.
44. அ) தண்ணீர் கதையை கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. *(அல்லது)*
ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விளக்குக.
45. அ) காலத்தை வெல்லும் கணினி கட்டுரை எழுதுக.
முன்னுரை - தோற்றம் - கணக்கிட இயலாதவற்றையும் கணக்கிடும் கணினி - தமிழ் இணையப் பல்கலைக்கழகம் - பயன்கள் - முடிவுரை. *(அல்லது)* ஆ) நீரின்று அமையாது உலகு, நீரின்று அமையாது யாக்கை இவ்விரண்டு தொடர்களையும் ஒப்புமைப்படுத்தி கட்டுரை எழுதுக.